DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT,

KOMARAPALAYAM

S.T.C.No.370/2020

Deposition of Witness P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name : | வெங்கடாஜலம் | Village : | |
| Father's Name : | | Taluk : | |
| Caste : | | Religion : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.08.2021

குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள புகார் மனு வழக்குறைஞர் அறிவிப்பு நிரூபன பிரமாண வாக்குமூலம் அனைத்தும் நான் தகவல் சொல்லிதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் டெக்ஸ்டைல்ஸ் தொழில் செய்வதாக புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றா'ல் சரிதான். அவ்வாறு எத்தனை வருடங்களாக தொழில் செய்து வருகிறேன் என்றால் 20 வருடமாக தொழில் செய்து வருகிறேன். எனது நிறுவனத்தின் பெயர் என்ன என்றால் வி வி வி டெக்ஸ்டைல்ஸ். எனது நிறுவனத்தின் வருடாந்திர வருமானம் எவ்வளவு என்றால் சுமார் 80 லட்சம் முதல் 1 கோடி வரை இருக்கும். எனது ஆரம்பித்து சுமார் 20 வருடங்களாக வருமானவரி கட்டிவருகிறேன் என்றால் கட்டிவருகிறேன். எனது நிறுவனத்திற்கு நான் மட்டும்்தான் உரிமையாளர் எனது சொந்த ஊர் கடலூர் மாவட்டம். நான் தொழிலுக்காகதான் இந்த ஊருக்காக வந்தேன் என்றால் சரிதான். எந்தெந்த வங்கியில்கணக்கு உள்ளது ஐஓபி குமாரபாளையம் வங்கியில் மட்டும்தான். நான் நிலுவையில்லாமல் நான் வருமான வரி கட்டிவருகிறேன் என்றால் இந்த வருடம் வரையிலும் நான் கட்டி வருகிறேன். எதிரிக்கு 2019 ம் வருடம் ருபாய் 5 லட்சம் கடனாக கொடுத்துள்ளேன் என்று நான் சொல்வதற்கு வருமான வரிக்கு வராகடனாக காட்டியுள்ளேன் என்றால் இல்லை. நான் கொடுத்ததாக சொல்லப்படும் பணம் என்னிடம் ரொக்கமாக இருந்தது கொடுத்தேன். பணம் கொடுத்ததாக சொல்லப்படும்

தொகை எத்தனை நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் 500 ரூபாய் நோட்டுக்கள்,1000 ரூபாய் நோட்டகள் கலந்துதான் கொடுத்தேன். இந்த பணத்திற்கு நான் வட்டி எடுத்துகொண்டு கொடுத்தேனா என்றால் இல்லை. நான் பணம் கொடுக்கப்பட்டிருக்கும் தேதியிற்கு முன்பு எதிரி எப்போது என்னிடம் பணம் எப்போது கேட்டார் என்றால் ஒரு வாரத்திற்கு முன்பு, எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் காசோலை தவிர கூடுதலாக வேறேதும் ஆவணங்கள் எதுவும் கொடுத்தார என்றால் இல்லை. 5 லட்சம் என்பது என்னை பொறுத்தவரை பெரிய தொகை என்றால் ஆமாம். இந்த 5 லட்சம் கொடுப்பதற்கு நான் வசதியான நபர் என்று காட்டக்கூடிய நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கபட்டுள்ளேனா என்றால் இல்லை. எதிரி குடியிருக்கும் வீடு சொந்தவீடு என்றால் சரிதான். அந்த எதிரியின் வீட்டின் மீது அடமான பத்திரமோ கடன் பத்திரமோ வேறெதேனும் பத்திரமோ எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. 5 லட்சம் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு முன்பாக கொடுத்தல் வாங்கல் உள்ளதா என்றால் உண்டு. அது சம்மந்தமாக வரவு செலவுகள் எதேனம் எழுதிவைத்திருனந்தேனா என்றால் இல்லை. அவர் காசோலை மற்றும் பணமாகவும் திருப்பி கொடுத்துவிடுவார். அவ்வாறு கொடுக்கல் வாங்கல் இருந்தபோது நான் வட்டி வாங்கியிருந்தேனா என்றால் ஒவ்வொரு முறை கைமாத்தாக வட்டி வாங்கியிருந்தேன். அவருக்கு கொடுத்த பணத்திலேயே இந்த முறை கொடுத்து பணம்தான் அதிகம் என்றால் சரிதான். காசோலையை எதிரிதான் பூர்த்தி செய்துகொண்டுவந்தார். என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்தும் மற்றும் அஞ்சலக ஒப்புதல் அட்டையில் காட்டப்படும் கையெழுத்தும் வேறுவேறு என்றால் இல்லை ஒன்றில் சுருக்கி கையெழுத்து போட்டுள்ளார் மற்றொன்றில் நீட்டமாக கையெழுத்து போட்டுள்ளார். இரண்டும் ஒரே கையெழுத்துதான். எதிரியின் வீடும் என்னுடைய வீடும் மூன்று வீடு தள்ளிதான் குடியிருக்கிறோம். வழக்கறிஞர் அறிவிப்புடன் அனுப்பட்ட ஒப்புதல் அட்டை உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் இல்லை. வங்கி காசோலையை எதிரி என்னிடம் தரவில்லை என்றாலும் வேல்முருகன் பைனான்சை சேர்ந்த பிரபாகரனிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரிக்கு முறையாக அறிவிப்பு கொடுத்திருந்தால் அவரும் முறையாக

பதிலளித்திருப்பார், அவ்வாறு அறிவிப்பு முறையாக அனுப்பவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் வீட்டிருக்கு அருகே இருப்பதால் என்னுடை தனி செல்வாக்கை பயன்படுத்தி எதிரியின் அறிவிப்பை நானே பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரி சட்டபடி எந்தவித பணமும் தரவேண்டியதில்லை அவருடைய காசோலை துஷ்பிரயோகம் செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 5 லட்சம் பணம் கொடுத்திருந்தால் வருமானவரி கணக்கை தாக்கல் செய்திருப்பேன் அவ்வாறு பணம் கொடுக்காத காரணத்தினால் தான் வருமானவரி கணக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் வழக்கு தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.